# කාර්යසාධන හා වාර්ෂික ගිණුම් වාර්තාව -2012

# செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் -2012

# Performance Report and Annual Accounts - 2012



**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිලිනොච්චිය**

**மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி**

**District Secretariat - Kilinochchi**

# செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் - 2012

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

# உள்ளடக்கம்


| செயற்திறன் அறிக்கை– 2012 | பக்கம் |
|---|---|
| 1. மாவட்ட செயலரின் செய்தி | 01 |
| 2. மாவட்ட செயலகத்தின் அறிமுகம் | |
| 2.1. மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு | 02 |
| 2.2. மாவட்ட செயலகத்தின் குறிக்கோள் மற்றும் தொழிற்பாடுகள் | 03 |
| 3. மாவட்டத்தின் அறிமுகம் | 05 |
| 3.1. மாவட்டத்தின் நிர்வாகவரைபடம் | 06 |
| 3.2. மாவட்டத்தின் அடிப்படைப் புள்ளிவிபரங்கள் | 07 |
| 4. நிறுவன கட்டமைப்பும் அனுமதிக்கப்பட்ட ஆளணியும் | |
| 4.1. அமைப்பு வரைபடம் | 08 |
| 4.2. அனுமதித்த ஆளணி | 09 |
| 5. செயலாற்றுகை | |
| 5.1. பொது நிர்வாக செயற்பாடுகள் | 11 |
| 5.2. சமூக மற்றும் கலாச்சார செயற்பாடுகள் | 23 |
| 5.3. அபிவிருத்தி நடவடிக்கைகள் | 34 |
| 5.3.1 வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் | 44 |
| 5.4. கணக்குப் பொழிப்பு அறிக்கை | 46 |

## 1. மாவட்ட செயலரின் செய்தி

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் 2012ம் ஆண்டிற்கான செயற்திறன் மற்றும் கணக்கு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமது மாவட்ட செயலகம் அதன் நான்கு பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தின் கீழ் இயங்கும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உப அலுவலகங்கள் ஆகியவற்றின் செயற்திறன் 2012ஆம் ஆண்டு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டு மதிப்பீட்டின் மூலம் திறைசேரியினால் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குக் ஒதுக்கப்பட்ட நிதியானது சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களுக்கான பொதுச் சேவை நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக்க கூடியதாகவிருந்தது. இதற்காக மாவட்டச் செயலகத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவை வழங்கும் கிளைகளும் மற்றும் பிரதேச செயலகங்களும் முழு மூச்சுடன் செயற்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மகிந்த சிந்தனையின் கீழான திவிநெகும திட்டம் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. மேலும் வரிசை அமைச்சுக்களின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டுள்ளமையும் ஒரு சாதனையாகும்.

இறுதியாக இம்மாவட்டத்தின் மக்களின் வாழ்வாதார தேவைகள் மற்றும் அபிவிருத்தி பணிகள் தரமானதாகவும் வினைத்திறனாகவும் செய்து முடிப்பதற்கு பலவழிகளிலும் ஒத்துழைப்பு, மற்றும் ஆலோசனைகளை வழங்கிய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கு ம் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 2. மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

**2.1**. மாவட்ட செயலகத்தின் தொலை நோக்கு மற்றும் பணிநோக்கு

### தொலைநோக்கு

"மகிழ்ச்சி உங்கள் வாசலில்" அதுவே எங்கள் நோக்கு

### பணி நோக்கு

"அர்ப்பணிப்பு பணி செய்யும் விருப்பு , கரிசனையுடனான கவனிப்பு என்பவற்றால் உந்தப்பட்ட பணியாளர்களின் சேவை மூலம் வாசல்தோறும் மகிழ்ச்சியை கொண்டு வருவதே"

## 2.2. மாவட்ட செயலகத்தின் குறிக்கோள் மற்றும் தொழிற்பாடுகள்

- **வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை.**

- மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- ஊழியர்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் (தனிநபர் கோவை, விடுமுறை , சம்பளம் மேலதிக நேர கொடுப்பனவுகள் , விடுமுறை நாள் கொடுப்பனவுகள் , ஊழியர்களின் பிரயாண ஆணைச்சீட்டு , கடனுதவி).
- பொதுமக்களிற்கான சேவைகளை வழங்குதலும் அவற்றினை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கான வழிநடத்தல்களையும் மேற்கொள்ளல்
  - கடவுச்சீட்டு, அடையாள அட்டைகள் பெற்றுகொடுத்தல், மோட்டார் வாகன வரி, வியாபார அனுமதிப்பாத்திரங்கள், பிறப்பு இறப்பு மற்றும் திருமணபதிவு சான்றிதழ்.
  - போக்குவரத்து வழி அனுமதிகளை வழங்குதல்.
  - வாகனத்தை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
  - வாக்களார் பதிவுகளை பெற்றுக் கொள்ளல்.
  - காணிக்கான உறுதிகள் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குவதினை ஒழுங்குபடுத்தலும், காணிப்பிரச்சினையைத் தீர்த்தலும்
  - முதியோர்களுக்கும் மாற்றுத்திறனாளி களுக்குமான மாதாந்த உதவித்தொகை வழங்கல்
  - மக்களுக்கான உளவள மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
  - வேலையற்ற இளைஞர் யுவதிகளிற்கான தொழிற்பயிற்சிகளும் பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கான சுயதொழில் பயிற்சிகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கல்.

- **செயலகத்தின் குறிக்கோளை அடைவதற்கு வினைத்திறனான நிதி கொடுக்கல் வாங்கல் முறைமைகளை பின்பற்றலும் நடைமுறைப்படுத்தலும்**

- மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீட்டினை உரிய அனுமதியுடன் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தலும் கணக்கு வைத்தலும்
- ஊழியர்கள் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளை வழங்கல்
- மாவட்ட செயலகத்தில் வைப்பிலுள்ள பணத்தை உரிய அனுமதியுடன் குறிப்பிட்ட தேவைக்காக பயனபடுத்தல்
- மாதாந்த, வருடாந்த அறிக்கைகளை திணைக்களங்களிற்கும் அமைச்சுக்களிற்கும் திறைசேரிக்கு அனுப்புதல்
- ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்கல்
- மாவட்ட, பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கல்
- வருடாந்த பொருள் கணக்கெடுப்பு , வருடாந்த பெறுகை திட்டத்தினை தயாரித்தல்

- **மாவட்ட கலை கலாச்சார பண்பாடு மற்றும் வினைத்திறன் வலுவூட்டுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் அவற்றிற்கான வழிகாட்டல்களையும் மேற்கொள்ளல்**.
  கலை கலாச்சார விழாக்களை மேற்கொள்ளல், மாவட்ட மற்றும் தேசிய அளவிலான நிகழ்வுகள்

- **மாவட்டத்திலுள்ள வளங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்தலும் அதற்கான திட்டங்களையும் மேற்கொள்ளல்**.
  இதனை மாவட்ட திட்டமிடல், காணி பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு , மாவட்ட தொழிற்பயிற்சி மையம் , மாவட்ட விவசாய பிரிவும் மேற்கொண்டுவருதல்.

- **பொதுமக்களைப் பாதுகாத்தல் , பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குதலும்**.
  அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களில் (வெள்ளப்பெருக்கு, சூறாவளி , அடைமழை , வறட்சி) இருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்

- **மாவட்டத்திலுள்ள அனைத்துப் புள்ளிவிபரங்களை திரட்டுதலும் பேணுதலும்**
  இம் மாவட்ட புள்ளிவிபரக்கிளையினால் மேற்கொள்ளப்பட்டது.

- **மாவட்டத்திலுள்ள பிரதேச , கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திட்டமிடலும் ஒழுங்குபடுத்தலும்**
  - வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன, மின்சார வசதிகள் ஒழுங்கமைத்தல்
  - பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் மூலம் கிடைக்கும் நிதியில் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் , மேற்பார்வை செய்தலும்;
  - தற்பொழுது அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் (திவிநெகும, கமநெகும, மகநெகும)
  - வீடமைப்பதற்கான உதவி வழங்கல்
  - யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டு தொகை வழங்குதல்

## 3. மாவட்டத்தின் அறிமுகம்

யாழ் மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சி பிரதேசம் புதிய மாவட்டமாக 1984ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி உருவாக்கப்பட்டது. இதன் எல்லைகளாவன,

வடக்கு - யாழ்மாவட்டம்
கிழக்கும் தெற்கும் - முல்லைத்தீவு மாவட்டம்
மேற்கும் தெற்கும் - மன்னார் மாவட்டம்

வரலாற்றுப் பெருமைகள் வாய்ந்த உருத்திரபுரம் சிவன் கோயில் , புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் , மண்ணித்தலை புனித அந்தோனியார் தேவாலயம், பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம் , பொன்னாவெளி சிவன் ஆலயம், பூநகரி ஒல்லாந்தர் கோட்டை ஆகியன குறிப்பிடத்தக்கது.இயற்கை வளங்களான இரணைமடுக்குளம் , சுண்டிக்குளம், பறவைகள் சரணாலயம் , கௌதாரிமுனை கடற்கரை ஆகியன அமைந்துள்ளன.

இம் மாவட்டத்தின் பிரதான தொழில் விவசாயமாக அமைந்துள்ளது. பெரும்பாலானோர் நெற்செய்கையில் ஈடுபடுவதுடன் , ஏனையவர்கள் உப உணவு உற்பத்திகள், பழமரச் செய்கை , மாடு, ஆடு,கோழி வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். அத்துடன் மீன்பிடித்தொழில் இரண்டாவது இடத்தைப்பிடித்து இம் மக்களின் ஜீவனோபாயத்திற்கு உதவுகின்றது.

இரணைமடுக்குளம் உட்பட எட்டு பெரிய நீர்ப்பாசனக்குளங்களும் 312 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் இம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இத்துடன் மானாவாரியாகவும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றார்கள்.

முழுமையாக அண்மைய யுத்தத்தினால் இம் மாவட்டத்தின் மக்களுக்கான மீள்குடியேற்றம் 2009 கார்த்திகை மாதத்திலிருந்து ஆரம்பமானது. தற்போது மீள்குடியேற்றம் புறக்கணிக்கத்தக்கதான தொகையினரை விட முழுமை பெற்றுவிட்ட தெனலாம். 31.12.2012 இல் உள்ளவாறான சனத்தொகை புள்ளிவிபரம் வருமாறு,

| பிரதேச செயலக பிரிவு | ஆண் | பெண் | மொத்த சனத்தொகை |
|---|---|---|---|
| கரைச்சி | 33506 | 36202 | 69708 |
| கண்டாவளை | 11639 | 12596 | 24235 |
| பூநகரி | 11567 | 11951 | 23518 |
| பச்சிலைப்பள்ளி | 5611 | 5898 | 11509 |
| மொத்தம் | 62323 | 66647 | 128970 |

இம் மாவட்டத்தின் சராசரி மழைவீழ்ச்சி 1520.57 மில்லி மீற்றர் ஆகும். 75 வீதம் மழைவீழ்ச்சி செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் வடகிழக்கு

பருவப்பெயர்ச்சி காற்றினால் கிடைக்கிறது. வெப்ப காலமாக யூன் தொடக்கம் ஆகஸ்ட் வரையும் கருதப்படுகிறது. மாதாந்த சராசரி வெப்பநிலை 25 தொடக்கம் 30 பாகை செல்சியஸ் ஆகும்.

### 3.1. மாவட்டத்தின் நிர்வாக வரைபடம்

மாவட்ட நிர்வாக வரைபடம்



## 3.2. மாவட்டத்தினுடைய அடிப்படைப் புள்ளிவிபரத் தகவல்கள்

| | |
|---|---|
| மாவட்டத்தின் பெயர் | கிளிநொச்சி |
| மாகாணம் | வடமாகாணம் |
| முழு இட விஸ்தீரணம் | 1237.11 சதுர கி.மீ |
| பிரதேச செயலக பிரிவுகளின் எண்ணிக்கை | 04 |
| கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | 95 |
| கிராமங்களின் எண்ணிக்கை | 354 |
| வாக்கெடுப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | 95 |
| மாநகர சபைகளின் எண்ணிக்கை | -- |
| நகர சபைகளின் எண்ணிக்கை | -- |
| பிரதேச சபைகளின் எண்ணிக்கை | 03 |
| அமைச்சின் மாவட்டச் செயலரின் கீழ் இயங்கும், அரச விடுதிகளின் எண்ணிக்கை | 16 |
| வலயக்கல்விப்பணிப்பாளர்களின் எண்ணிக்கை | 01 |
| பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | 108/1702 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 09 |
| மாகாணசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | -- |
| உள்ளூர் அதிகாரசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 37 |
| குடித்தொகை | 128970 |

# 4. நிறுவன கட்டமைப்பும் அனுமதிக்கப்பட்ட ஆளணியும்

## 4.1. நிறுவன அமைப்பு வரைபடம்



## அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம்
## மாவட்ட செயலகம் (கருத்திட்டம் - 1)

| தொ. இல | பதவி | சேவை | தரம்/ வகுப்பு | அனுமதித்த ஆளணி | தற்போதைய ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் (அ) | | | | | | |
| 1 | அரசாங்க அதிபர் | இ.நி.சே | விசேட | 1 | பதில்கடமை இ.நி.சே.தரம் 1 | 0 |
| 2 | மேலதிக அரசாங்க அதிபர் | இ.நி.சே | I | 1 | 1 | 0 |
| 3 | உதவி மாவட்டச் செயலாளர் | இ.நி.சே | III | 1 | 1 | 0 |
| 4 | பிரதம கணக்காளர் | இ.க.சே | I | 1 | 1 | 0 |
| 5 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | I | 1 | - | 1 |
| 6 | கணக்காளர் | இ.க.சே | III | 1 | 1 | - |
| 7 | பொறியியலாளர் | இ.பொ.சே | III | 1 | 1 | 0 |
| 3ம் நிலை மட்டம் (ஆ) | | | | | | |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் | பொ.மு.உ.சே | அ.வி.த | 1 | 1 | 0 |
| 9 | மொழி பெயர்ப்பாளர் | மொ.சே | I | 1 | 0 | 1 |
| 2ம் நிலை மட்டம் (இ) | | | | | - | |
| 10 | அபிவிருத்தி இணைப்பாளர் | பட்டதாரி | | 2 | - | 2 |
| 11 | பாதீட்டு உதவியாளர் | பட்டதாரி | | 2 | - | 2 |
| 12 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உ.சே | I,II,III | 56 | 56 | 0 |
| 13 | தொழில்நுட்ப அலுவலர் | இ.தொ.சே | II ஆ | 1 | - | 1 |
| 14 | பட வரைஞர் | இ.தொ.சே | II ஆ | 1 | - | 1 |
| 15 | வரவேற்பாளர் | | | 1 | 1 | 0 |
| 1ம் நிலை மட்டம் (ஈ) | | | | | | |
| 16 | சாரதி | சா.சே | IIஆ,IIஅ,I | 4 | 4 | 0 |
| 17 | அலுவலக உதவியாளர் | அ.ப.சே | I,II,III | 30 | 21 | 9 |
| 18 | காவலாளி | காவலாளி | | 2 | 2 | 0 |
| | **மொத்தம்** | | | **108** | **91** | **17** |

## பிரதேச செயலகங்கள் (கருத்திட்டம் - 2)

| தொ. இல | புதவி | சேவை | தரம்/ வகுப்பு | அனுமதித் த ஆளணி | தற்போதைய ஆளணி | வெற் றிடம் |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் (அ) | | | | | | |
| 1 | பிரதேச செயலர் | இ.நி.சே | I | 4 | பதில் கடமை 4 இ.நி.சே III | 0 |
| 2 | உதவி பிரதேச செயலர் | இ.நி.சே | III | 4 | 0 | 4 |
| 3 | கணக்காளர் | இ.க.சே | III | 4 | 1 | 3 |
| 3ம் நிலை மட்டம் (ஆ) | | | | | | |
| 4 | நிர்வாக உத்தியோகத்தர் | பொ.மு.உ. சே | அ.வி.த | 4 | 1 | 3 |
| 5 | நிர்வாக கிராம அலுவலர் | கி.அ.சே | அ.வி.த | 4 | 0 | 4 |
| 6 | மொழி பெயர்ப்பாளர் | மொ.சே | | 4 | 0 | 4 |
| 2ம் நிலை மட்டம் (இ) | | | | | | |
| 7 | பாதீட்டு உதவியாளர் | பட்டதாரி | | 4 | 0 | 4 |
| 8 | அபிவிருத்தி இணைப்பாளர் | பட்டதாரி | | 4 | 0 | 4 |
| 9 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உ. சே | I,II,III | 150 | 52 | 98 |
| 10 | கிராம அலுவலர் | கி.அ.சே | II,III | 95 | 55 | 40 |
| 11 | தொழில்நுட்ப அலுவலர் | இ.தொநு.சே | | 4 | 0 | 4 |
| 12 | பட வரைஞர் | தொ.நு.சே | II ஆ | 4 | 0 | 4 |
| 1ம் நிலை மட்டம் (ஈ) | | | | | | |
| 13 | ஆவண காப்பாளர் | அ.ப.சே | I,II,III | 4 | 0 | 4 |
| 14 | சாரதி | சா.சே | IIஆ,IIஅ,I | 12 | 9 | 3 |
| 15 | தொலைபேசி இயக்குனர் | அ.ப.சே | I | 4 | 0 | 4 |
| 16 | காவலாளி | அ.ப.சே | II | 12 | 3 | 9 |
| 17 | அலுவலக பணியாளர் | அ.ப.சே | III | 33 | 19 | 14 |
| 18 | சுத்திகரிப்பாளர் | அ.ப.சே | II | 4 | 2 | 2 |
| 19 | தோட்ட பராமரிப்பாளர் | அ.ப.சே | II | 4 | 0 | 4 |
| 20 | புத்தக கட்டுனர் | அ.ப.சே | I | 4 | 1 | 3 |
| | மொத்தம் | | | **362** | **147** | **215** |

# 5. செயலாற்றுகை

## 5.1 பொது நிர்வாக செயற்பாடுகள்

### (அ) கிராம உத்தியோகத்தர்

95 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள இம் மாவட்டத்தில் 2012 ல் கிராம உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ போட்டியில் கரைச்சிப் பிரிவைச் சேர்ந்த வட்டக்கச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவு முதலிடம் பெற்றுள்ளது.

### (ஆ) உள்ளகக் கணக்காய்வு

மாவட்டச் செயலரின் மேற்பார்வையின் கீழ் ஒரு முகாமைத்துவ உதவியாளர் கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரினால் மட்டுமே மாவட்டச் செயலகம் , மாவட்ட திட்டமிடல் செயலகம் மற்றும் நான்கு பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை உள்ளகக் கணக்காய்வுக் குழு கூட்டம் கூட்டப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஐந்து பட்டதாரி பயிலுனர்கள் உள்வாங்கப்பட்டு தனியான உள்ளகக் கணக்காய்வு பிரிவு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உள்ள கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக பிரதம உள்ளக கணக்காய்வாளர் வகுப்பு I புதிய ஆளணி 2012 உருவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் அப் புதிய பதவி வெற்றிடமாகவே உள்ளது.

### (இ) மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

<u>சாரதி அனுமதிப்பத்திரம்</u>

| | |
|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 4814 |
| எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை | 4277 |
| செய்முறைப்பரீட்சையில் தோற்றியோர் | 3992 |
| செய்முறைப்பரீட்சையில் சித்தியடைந்தோர் | |
| மோட்டார் சைக்கிள் | 3972 |
| மோட்டார் முச்சக்கரவண்டி | 3480 |
| இரட்டைபிரயோக வான் | 2360 |
| உழவு இயந்திரம் | 592 |
| பேருந்து | 3 |
| <u>வாகன உடமை மாற்றல்</u> | |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 664 |

## (ஈ) பயிற்சி வகுப்புக்கள்

பொது நிர்வாக அமைச்சின் கீழ் பொது சேவை பயிற்சி நிலையத்தின் அனுசரனையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்ட பயிற்சிகள்

- முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பின்வரும் விடயப்பரப்புக்களை உள்ளடக்கிய பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன. அவையாவன அலுவலகம், களஞ்சிய, நிதி முகாமைத்துவம், ஓய்வூதியம், சிகாஸ், நல்லாட்சியும் மனித வள முகாமைத்தும்.
- அலுவலக பணியாளர் மற்றும் சாரதிகளுக்கான பயிற்சி நெறி

## (உ) தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு

### 01. தேசிய மொழிகள் தொடர்பான வேலைகள்

- மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து மொழிக் கொள்கையினை அமுல்ப்படுத்தல் தொடர்பான தேவை மதிப்பீடு செய்யப்பட்டது.
- மும்மொழி அகராதி மற்றும் மொழிபெயர்ப்பு குழாம் பற்றிய தகவல்கள் அனைத்து மாவட்ட திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டன.
- தேசிய போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பேருந்துக்களில் மும்மொழி அமுலாக்கம் தொடர்பான கள ஆய்வு பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்டது.
- திணைக்களங்களில் மும்மொழிப் பயன்பாடு தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மாகாண காரியாலத்திற்கான பெயர்பலகை நாட்டப்பட்டன.
- அரச உத்தியோத்தர்களின் வாகனங்களில் பயன்படுத்தப்படும் பதவி மற்றும் பெயர்கள் மும்மொழிகளிலும் வெளிப்படுத்தல் பற்றி அறியப்படுத்தப்பட்டது.

### 02. மொழிச்சங்க மக்கள் இயக்க செயற்பாடு

- கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 41 சங்கங்கள் உருவாக்கப்பட்டு 20 சங்கங்கள் பதியப்பட்டுள்ளன.
- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 16 மொழிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 03. உத்தியோகத்தர்களுக்கான மொழிப்பயிற்சி வகுப்புக்கள்

- சிங்களம் மட்டம் 111 ற்கான வகுப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறுகின்றன. இதில் 41 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்
- சிங்களம் மட்டம் 11 ற்கான வகுப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறுகின்றன. இதில் 42 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

## 04. சமூக ஒருமைப்பாட்டு செயற்றிட்டங்கள்

- மார்ச் 11ம் திகதி சமூக பிரச்சினைகளை கண்டறிவதற்கான சமூக ஒருமைப்பாட்டு கலந்துரையாடல் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் 640 ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.
- சமூக ஒருமைப்பாட்டு தகவல்கள் 04 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சேர்க்கப்பட்டன.
- யூலை 20ம் திகதி மக்கள் பங்குபற்றலுடனான சமூக ஒருமைப்பாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கண்டாவளை ஆதிவிநாயகர் முன்பள்ளியில் நடைபெற்றது. இதில் பாடசாலை உபகரணங்க ள் கட்டட கூரை திருத்தல் வேலைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.
- ஒக்டோபர் 09 மற்றும் 10ம் திகதிகளில் விசேட தேவைப்பாடுடைய மக்களை வலுவூட்டல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் கண்டாவளை தருமபுர நெசவு நிலையத்தில் நடைபெற்றது. இதில் 86 பேர் பங்கு பற்றியிருந்தனர்.
- சமூக ஒருமைப்பாட்டு மேம்பாட்டு தேவைமதிப்பீடு தொடர்பான ஒன்றுகூடல் கரைச்சி பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 60 பேர் பங்குபற்றியிருந்தனர்.
- சமூக ஒருமைப்பாட்டு மேம்பாட்டு தேவைமதிப்பீடு தொடர்பான ஒன்றுகூடல் கண்டாவளை பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 35 பேர் பங்குபற்றியிருந்தனர்.
- சமூக ஒருமைப்பாட்டு தேவைகள் தொடர்பான ஆய்வு கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்பட்டது. இதில் 420 குடும்பங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.
- சமூக ஒருமைப்பாட்டு தேவைகள் தொடர்பான ஆய்வு கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்பட்டது. இதில் 150 குடும்பங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.
- சமூக பிரச்சினைகளை கண்டறிவதற்கான சமூக ஒருமைப்பாட்டு கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் 200 ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.
- கண்டாவளை பிரதேச செயலகத்தில் விசேட தேவைப்பாடுடையவர்களை குடும்ப அங்கத்தவர்களாக கொண்ட 08 குடுப்பங்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

## 05. நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டம்: இறுதி நடமாடும் சேவைகள்

- மார்ச் 24 மற்றும் 25ம் திகதிகளில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இறுதிகட்ட நடமாடும் சேவைகள் நடைபெற்றன. இதில் 2500 பேர் பயனடைந்தனர்.
- மே 17ம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இறுதிகட்ட நடமாடும் சேவை நடைபெற்றது. இதில் 1700 பேர் பயனடைந்தனர்.

### 06. சமூக மேம்பாட்டு நிகழ்ச்சி : விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்ச்சிகள்

- ஏப்ரல் மாதம் வட மாகாணத்திற்கான தமிழ் சிங்கள புதுவருட விழா - 2012 ல் நடைபெற்றது. இதில் 800ற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்
- செப்டம்பர் 21ம் திகதி இளைஞர்களை நிலைமாற்றல்: விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் 500ற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர் (ஜிரிசட் ன் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி)

### 07. மொழிக் கொள்கையும் ஊடகங்களும்

- பாலம் வானொலி நிகழ்ச்சியில் மொழிக்கொள்கை தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெறுவதனை மாவட்ட செயலக அனைத்து திணைக்களங்களுக்கும் அறியப்படுத்தப்பட்டன
- சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்த கல்வி, பொருளாதாரம். நீதி , பௌதீக வளம் மற்றும் பாதுகாப்பு போன்ற பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டன

### 08. சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள்

- ஜுலை மாதம் சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்காக சட்ட உதவிச் சிகிச்சை இராமநாதபுரம் கிராமசேவகர் பிரிவில் நடைபெற்றது. 150 பேர் பங்குபற்றினர்
- ஒக்டோபர் 19 ம் திகதி சட்ட உதவிச் சிகிச்சை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றது. இதில் 75 பேர் பங்குபற்றினர்
- ஒக்டோபர் 20 ம் திகதி சட்ட உதவிச் சிகிச்சை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றது. இதில் 200 பேர் பங்குபற்றினர்
- ஒக்டோபர் 21 ம் திகதி சட்ட உதவிச் சிகிச்சை கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றது. இதில் 150 பேர் பங்குபற்றினர்

## (ஊ) தேர்தல்கள் திணைக்களம்

2012ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்புத் திருத்தப்பணிகள் 2012 ஜுன் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துப் பிரதேச செயலகங்கள் , கிராம அலுவலர்களிற்கான மீளாய்வு அறிவுறுத்தற் கூட்டங்கள் நடாத்தப்பட்டு மீளாய்விற்குரிய படிவங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒக்டோபர் மாத இறுதிக்கு முன்னர் சகலரும் பதிவுகளை கிராம அலுவலர்களினூடாக உறுதிசெய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்படட்டது. இதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்காக 2011ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு ஜுன் 01ம் திகதி முதல் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஒக்டோபர் மாதத்தில் அந்தந்த கிராம அலுவலர்களினால் நேரடியாக தேர்தல்கள் அலுவலகத்தில் சமூகமளித்து செவ்வை பார்த்து ஒப்படைக்கப்பட்டன.

மேற்படி மீளாய்வின் போது பெறப்பட்ட விபரங்கள் மூலம் கிளிநொச்சி மாவட்ட தேருநர் இடாப்புக்களின் 2012ம் ஆண்டிற்குரிய கணனி மயப்படுத்தப்பட்ட 'ஏ' நிரல்கள் மற்றும் 'பீ' நிரல்களினதும் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேற்படி பட்டியல் 2012.10.04 முதல் 2012.10.31ம் திகதி வரை பொதுமக்களுக்கு கவனத்திற்கு

காட்சிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேல்குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் பெறப்பட்ட ஆடசேபனைகள் , உரிமைக்கோரிக்கைகள் திருத்தங்களோடு 2012ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு பணிகள் யாவும் 2012 டிசெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டன.

2012ம் ஆண்டிற்கான தேருநர் இடாப்புக்கள் 2012.12.31ம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. 2012ம் ஆண்டின்படி மொத்த வாக்காளர் தொகை 68589 ஆகும். தேர்தல் தொடர்பான கொடுப்பனவுகள் யாவும் யாழ் தேர்தல்கள் அலுவலகத்தினால் செய்யப்பட்டது. கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தினால் 157 பிரித்தெடுப்புப் பிரதிகள் 2012 இல் வழங்கப்பட்டது.

**2012ம் ஆண்டு வாக்காளர் விபரம்**

| | |
|---|---|
| கரைச்சி | 35351 |
| கண்டாவளை | 13351 |
| பூநகரி | 12310 |
| பச்சிலைப்பள்ளி | 7577 |
| | 68589 |

## (ஏ)தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான வேலைகள்.

கரைச்சி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2688 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 1693 ஆகும்.

கண்டாவளை பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 707 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 638 ஆகும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 434 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 308 ஆகும்.

பூநகரி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 943 ஆகும். இதில் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 177 ஆகும்.

## (ஏ) மாவட்டப் பதிவாளர் திணைக்களம்

| இல | விபரம் | எண்ணிக்கை | முத்திரைப் பெறுமதி |
|---|---|---|---|
| 1 | வருடத்தில் பதிவு செய்யப்பட்ட உறுதிகள் | 2440 | 6288 |
| | வருடத்தில் பதிவு செய்யப்பட்ட அளிப்புகள் | 91 | |
| 2 | வருடத்தில் பெறப்பட்ட உறுதி இணைப்பிரதிகள் | 728 | |
| 3 | பிரதிகள் பெறுவதற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | | |
| | அ. காணிப்பதிவேட்டுத்தாள் | 143 | 747 |
| | ஆ. உறுதிப்பிரதிகள் | 19 | 4925 |
| 4 | தேடுதல் விண்ணப்பம் காணிப்பதிவேடு | 10 | 25 |
| 5 | இணைப்பிரதிகளில் ஒட்டப்பட்ட முத்திரை கட்டணம் | | 4362614.6 |
| 6 | பதிவு செய்யப்பட்ட விவாகங்களின் எண்ணிக்கை | 1134 | |
| 7 | பதிவு செய்யப்பட்ட பிறப்புக்களின் எண்ணிக்கை | 2719 | |
| 8 | பதிவு செய்யப்பட்ட இறப்புக்களின் எண்ணிக்கை | 318 | |
| 9 | அனுமதிக்கப்பட்ட திருத்த பிரதிக்கினைகளின் எண்ணிக்கை | 400 | |
| 10 | வழங்கப்பட்ட அனுமான வயது சான்றிதழ்களின் எண்ணிக்கை | 51 | |
| 11 | பதிவு செய்யப்பட்ட காலம்கடந்த பிறப்பு | 400 | |
| 12 | பதிவு செய்யப்பட்ட காலம்கடந்த இறப்பு | 28 | |
| 13 | விவாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் அனுமான வயது சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்காக அ. பெற்ற விண்ணப்பங்கள் | A20991<br>B7009 | 915035<br>370780 |
| 14 | வழங்கப்பட்ட பிரதிகள் | A23468<br>B4170 | |
| 15 | விவாக பிறப்பு இறப்பு மொழிபெயர்ப்பு விண்ணப்பம் | 333 | 44300 |
| 16 | வழங்கப்பட்ட மொழிபெயர்ப்பு பிரதிகள் | 443 | |

## (ஒ). மாவட்ட புள்ளிவிபரக்கிளையின் செயற்பாடுகள்

குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2011 இன் கணக்கெடுக்கும் கட்டம் 2012 பெப்ரவரி 27ம் திகதி தொடக்கம் மார்ச் 21ம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றது. 1981 தொகைமதிப்பின் 30வருடங்களின் பின்னர் இம்முறை நாடு முழுவதையும் தொகைமதிப்பில் உள்ளடக்க முடிந்தது. வீட்டுக்கூறுகளைக் கணக்கெடுத்தலானது கணக்கெடுக்கும் கட்டத்தில் நபர்களின் தகவல்களைச் சேகரிப்பதற்கு மேலதிகமாக வீட்டுவசதித் தகவல்களைச்

சேகரித்தலின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. வீட்டு வசதித் தகவல்களைச் சேகரித்தலானது நபர்கள் வசிக்கும் வீட்டுக்கூறுகளில் மட்டும் சேகரிப்பட்டதெனினும் வெறுமையாகக் காணப்பட்ட வீட்டுக்கூறுகளும் இதன்போது கணக்கெடுப்பிற்கு உட்படுத்தபட்டன. வீட்டுத்தகவல் சேகரிப்பானது கூறின் தகவல்கள் மற்றும் குடித்தனத் தகவல்கள் என இரண்டு பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த வருடத்தில் சராசரி நெல் விளைச்சல் மதிப்பீடு செய்வதற்காக ஆண்டுக்கு இருமுறை நடாத்தப்படும் மாதிரி அளவீடுகள், கைத்தொழில்களின் வருடாந்த அளவீடு, தொழிற்பல அளவீடு, குடித்தன வருமான செலவின அளவீடு , நெற்புள்ளிவிபரங்களை சேகரித்தல் , மேட்டுநில பயிர்ச்செய்கை விபரங்கள் , கால்நடைப்புள்ளி விபரங்கள் , கட்டிடப்புள்ளி விபரங்கள் , மற்றும் நகர சில்லறைவிலைகளும் உள்ளூர் உற்பத்திகளின் உற்பத்தியாளர் விலைகளும் புள்ளிவிபரக்கிளையால் மேற்கொள்ளப்பட்டது.

## (ஓ) அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

## அனர்த்த தடுப்பு செயற்பாடுகள்

கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள உருத்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்கு கழிவு வாய்க்கால் புனரமைப்பு செய்வதற்கு 6.3 மில்லியனும் பிரமந்தனாறு கழிவுவாய்க்கால் புனரமைப்பதற்கு 3.5 மில்லியனும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டு அதற்கான புனரமைப்பு வேலைகளும் முடிவடைந்துள்ளது. அத்துடன் 2012ம் ஆண்டிற்கான அனர்த்த தடுப்பு செயற்பாடுகளுக்கான முன்மொழிவுகள் 12 அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் 7மில்லியன் பெறுமதியான அனர்த்த தடுப்பு செயற்பாடுகள் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன



கழிவு வாய்க்கால் புனரமைப்பும்,பழுதடைந்த நிலையில் உள்ள கிணறு திருத்தியமைக்கப்பட்டமை

## வெள்ள அனர்த்த முகாமைத்துவம்

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஏற்ப்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுகளில் 563 குடும்பங்களைச் சேர்ந்த 2145 அங்கத்தவர்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 3930 குடும்பங்களைச் சேர்ந்த 14782 அங்கத்தவர்களும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் 322 குடும்பங்களைச் சேர்ந்த 1228 அங்கத்தவர்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் 524குடும்பங்களைச் சேர்ந்த 1978 அங்கத்தவர்களும் பாதிக்கப்பட்டனர். இவற்றுள் 14 பாதுகாப்பான இடங்களில் 844 குடும்பங்களைச் சேர்ந்த 3005 அங்கத்தவர்களும் தங்கவைக்கப்பட்டு இவர்களுக்கான சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் அனர்த்தநிவாரண சேவைகள் நிலையத்தினாலும் , அரசசார்பற்ற நிறுவனங்களினாலும், வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கும் நிவாரண உதவிகள் வழங்குவதற்கும் 10 மில்லியன் ரூபா அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டன.



பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்குதலும், மருத்துவ வசதிகளும்



கண்டாவளை பிரதேச செயலகம் வெள்ளத்தில்



இரணைமடு அணைக்கட்டில் நீர் கசிவின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் தொண்டர்களின்உதவியுடன் இரணைமடு அணைக்கட்டிற்கு மண்மூடை அடுக்குதல்

## வறட்சி நிவாரண செயற்பாடுகள்

2012 சித்திரை தொடக்கம் ஒக்டோபர் மாதங்களில் ஏற்பட்ட கடும்வறட்சியினால் பாதிக்கப்பட்ட கரைச்சி , கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு வறட்சிக் கால குடிநீர் வழங்குவதற்கு 4 மில்லியன் ரூபா அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டன.

வறட்சி காலத்தில் குடிநீர் வழங்குவதற்காக நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் 1000லீற்றர் கொள்கலன் 122ம் மின்சாரத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் 14ம் அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது.

வரட்சியினால் பாதிக்கப்படும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக வடமாகாண ஆளுநர் கௌரவ சந்திரசிறி அவர்களினால் வழங்கப்பட்ட 4 உழவு இயந்திர நீர்த்தாங்கிகளும் மாவட்ட அரசாங்க அதிபரினால் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டன.

## கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்.

ஓக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரனையுடன் எக்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடனும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் பூநகரி பிரதேச செயளாலர் பிரிவுகளில் உள்ள 19 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கண்டாவளை பிரதேச செயளாலர் பிரிவுகளிலும் 06 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான முதலுதவி , விழிப்புணர்வு, இடர் பாதிப்பு நிலை பகுப்பாய்வு , தொடர்பாடல் பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டன.

சுனாமி, வெள்ளம் போன்றவற்றுக்கான ஒத்திகை நிகழ்வுகள் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பள்ளிக்குடா, இரணைமாதநகர், நாச்சிக்குடா போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வெள்ள அனர்த்தம் தொடர்பான ஒத்திகை நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் கோரக்கன்கட்டு , கிராம சேவையாளர் பிரிவிலும் நடாத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடனும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அனுசரனையுடனும் இணைத்து கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 0 6 கிராம சேவையாளர் பிரிவிலும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 06 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 03 கிராம சேவையாளர் பிரிவுகளிலும கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களும் அதற்கான வரைபடங்களும் தயாரிக்கப்பட்டன. அத்தோடு பாதுகாப்பான இடங்கென என தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளுக்கு சூரிய மினகலத் தொகுதிகள் 37ம் மலசலகூடங்களும் சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.



## அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களும் , பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களும் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவுசெய்யப்பட்டன.

|  |  |
|---|---|
| கண்டாவளை பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழு கலந்துரையாடல் | பூநகரி பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழு கலந்துரையாடல் |

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் இயலுமையினை விருத்தி செய்யும் செயலமர்வு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இச்செயலமர்வில் மாவட்ட திணைக்கள தலைவர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் , இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## ஏனைய அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட செட்டியார் குறிச்சி பல்லவராயன்கட்டு நல்லூர் கிராமசேவையாளர் பிரிவிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இயக்கச்சி கிராமசேவையாளர் பிரிவிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த நிவாரணசேவைகள் நிலையத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2011/2012 ஆண்டுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரைத்தகடுகளும் அனர்த்தகாலங்களிலும் சமைத்த உணவு வழங்குவதற்கு 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் 03 பிரதேசசபைகளுக்கும் சமையல் உபகரணங்களும் மெகா தொலைபேசியும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ மகிந்த அமரவீர அவர்களினால் 05/08/2012 இல் வழங்கப்பட்டது.



அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ மகிந்த அமரவீர அவர்களினால் 05.08.2012ல் வழங்கி வைக்கப்பட்ட நிவாரணப்பொருட்கள்

08.03.2012ல் சர்வதேச மகளீர் தினம் பள்ளிக்குடாவில் உள்ள சுன்னாவில் அ.த.க பாடசாலையில் கொண்டாடப்பட்டது இதில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம் வரைதல் போட்டியும் நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன





2012ல் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷடிக்கப்பட்ட போது



26.12.2012ல் தேசிய பாதுகாப்பு தினம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட மகாநாட்டு மண்டபத்தில கொண்டாடப்பட்டது. 651 படையணியுடன் இணைந்து சுனாமி ஒத்திகை நிகழ்வு முழங்காவில் , நாச்சிக்குடா, இரணைமாதநகர் கிராமசேவையாளர் பிரிவிலும் 552வது படையணியுடன் இணைந்து கிளாலி கிராம சேவையாளர் பிரிவிலும் நடாத்தப்பட்டது. வேள்ட் விசன் அரசசார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து பாடசாலை அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.



பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு மான விழிப்புணர்வு கருத்தரங்கு



## 5.2 சமூக மற்றும் கலாச்சார செயற்பாடுகள்

### (அ) மாவட்ட மட்ட உளவளத்துணை பிரிவு

பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. இவ் விழிப்புணர்வு நிகழ்வுகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது.

- சிறுவர் பாலியல் துஷபிரயோகங்களும் மற்றும் அதனை தடுத்தலும்
- பெற்றோரிடம் தொடர்பான திறன்கள்
- பதின்ம வயதில் ஏற்படும் பிரச்சினைகளும் அதனை கையாளுதலும்

இதனைப்போலவே கிராம மட்டத்திலும் உளவளசமூக பிரச்சினைகளை குறைப்பதனை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன

- உளவளசமூகப்பிரச்சினைகளும் அதனை தடுத்தலும்
- சிறுவருக்கு ஏற்படும் வன்முறைகளும் பெற்றோர் தொடர்பான திறன்களும்
- மதுபோதை துஷபிரயோகத்தை தடுத்தல்
- பெற்றோர் தொடர்பான திறன்களும் வீட்டு வன்முறைகளும்
- ஆரோக்கியமான குடும்ப இணக்கப்பாடு

இதேபோல உளவளத்துணை சார்ந்த பல்வேறு பயிற்சிப்பட்டறைகளும் நிகழ்த்தப்பட்டன இவை ஆசிரியர்கள் , முன்பள்ளி ஆசிரியர்கள் , கிராம மட்ட நிறுவனங்கள், பெண்கள் அமைப்புக்கள், சிறுவர் இல்லபணியாளர்கள், சமூக ஆதரவு பணியாளர்கள், விசேட தேவையுடையவர்கள் , இளங்குடும்ப தம்பதியினர் , போன்றவர்களை மையப்படுத்தி நிகழ்த்தப்பட்டது. அப்பயிற்சிப்பட்டறைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

- சிறுவர்களும் அவர்தம் உளவளசமூகப் பிரச்சினைகளும்
- திருமண உளவளத்துணை
- திருமணத்திற்கு முன்னதான உளவளத்துணை
- சிறுவர்களை விளங்கி பணியாற்றுதல்
- உதவியளித்தல் திறன்கள்
- நெருக்கீடுகளும் நெருக்கீட்டை கையாளுதலும்
- சிறுவர் உளநலம்
- தலைமைத்துவம்
- தலைமைத்துவமும் ஆளுமை விருத்தியும்

## மாவட்ட மட்டம்

| மாதம் | தனிப்பட்ட உளவளத்து ணை | குடும்ப உளவளத்து ணை | பயிற்சிப் பட்டறை | விழிப்புணர்வு நிகழ்வு (பாடசாலை மட்டம்) | விழிப்புணர்வு நிகழ்வு (கிராம மட்டம்) |
|---|---|---|---|---|---|
| | தனிநபர் எண்ணிக்கை. | குடும்ப எண்ணிக்கை | நிகழ்வு எண்ணிக்கை | | |
| தை | - | 02 | 01 | 01 | 01 |
| மாசி | 03 | 01 | 01 | 01 | 03 |
| பங்குனி | 01 | - | - | - | - |
| சித்திரை | 03 | 02 | - | 02 | |
| வைகாசி | 01 | 03 | 02 | 02 | 02 |
| ஆனி | 03 | 06 | 02 | 0 | - |
| ஆடி | 03 | 07 | 02 | 02 | 03 |
| ஆவணி | 02 | 05 | 01 | - | - |
| புரட்டாதி | 02 | 01 | - | - | - |
| ஐப்பசி | 03 | 06 | 03 | 01 | 02 |
| கார்த்திகை | 01 | 03 | 01 | 01 | - |
| மார்கழி | - | 07 | 01 | - | - |
| மொத்தம் | 22 | 43 | 14 | 10 | 11 |

பிரதேச மட்டம்.

| மாதம் | தனிப்பட்ட உளவளத்துணை | குடும்ப உளவளத்துணை | குழு உளவளத்துணை |
|---|---|---|---|
| தை | 77 | 09 | 12 |
| மாசி | 57 | 15 | 11 |
| பங்குனி | 50 | 04 | 06 |
| சித்திரை | 87 | 21 | 03 |
| வைகாசி | 26 | 15 | 08 |
| ஆனி | 34 | 17 | 09 |
| ஆடி | 10 | 01 | 11 |
| ஆவணி | 35 | 09 | 08 |
| புரட்டாதி | 31 | 11 | 08 |
| ஐப்பசி | 55 | 09 | 07 |
| கார்த்திகை | 26 | 06 | 04 |
| மார்கழி. | 44 | 04 | 05 |
| மொத்தம் | 532 | 121 | 92 |





## (ஆ). தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

- கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 5 சிறுவர் இல்லங்கள் (மகாதேவ சிறுவர் இல்லம், காந்தி சிறுவர் இல்லம் , திருக்குடும்ப கன்னியர் மடம் , கருணா நிலையம், அன்பக இல்லம்) பொது சுகாதார பரிசோதகர் , உதவிக்கல்வி பணிப்பாளர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் , பொலிஸ் உத்தியோகத்தர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களால் 02 தடவை மேற்பார்வை செய்யப்பட்டது
- சமூகமட்ட அமைப்புக்களான மாதர் சங்கம் , கிராம அபிவிருத்தி சங்கம் , விளையாட்டுக்கழகம், கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழு அங்கத்தவர்களுக்கு 06 பயிற்சி கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

- சிறுவர் தொடர்பான அரச அலுவலர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 03 பயிற்சி கருத்தரங்கு நடாத்தப்பட்டது
- அரச அதிபர் தலைமையில் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான 05 மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது
- மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு அங்கத்தவர்களுக்கான 01 பயிற்சி பட்டறை நடாத்தப்பட்டது.
- சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் 1929 தொலைபேசி ஊடாக 17 முறைபாடுகள் பார்வையிடப்பட்டு சிறுவர்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் உரிமைகள் , சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 10 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.
- சிறுவர் பாதுகாப்பு மற்றும் பெற்றோரின் பொறுப்புக்கள் தொடர்பான 17 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி தொடர்பான 03 பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டது.
- கிராம மட்ட குழு அங்கத்தவர்களுக்கு 1929 தொலைபேசி தொடர்பான 04 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.
- சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் சட்டங்கள், 1929 தொலைபேசி விழிப்புணர்வு துண்டுபிரசுரம் 25000 அச்சிட்டு வெளியிட்டமை
- கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் மருத்துவ மாதுக்களுக்கான பெற்றோர் பங்களிப்பு தொடர்பான 05 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் (துடுப்பாட்ட தொகுதி , கால் பந்து, வலைப்பந்து, கூடைப்பந்து, கரம்போட், பூப்பந்து) 15 வழங்கப்பட்டது.
- சர்வதேச சிறுவர் தொழிலாளர் தினம் மாவட்ட மட்டத்தில் கொண்டாடப்பட்டது சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சிறுவர் நடைப்பயணம் மாவட்ட மட்டத்தில் கொண்டாடப்பட்டது.
- சிறுவர் இல்ல பிள்ளைகளுக்கும் உள ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் 07 சத்திர சிகிச்சை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- மாவட்ட மட்டத்தில் சிறுவர் உரிமையை பாதுகாத்தல் தொடர்பான 05 கையெழுத்து நிகழ்வுகள் நடாத்தப்பட்டது.
- மாவட்ட மட்ட சிறுவர்களுக்கான கலாசார நிகழ்வு மற்றும் பாசறை ஒன்று நடாத்தப்பட்டது
- வறிய குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு 250 கல்வி உபகரணம் வழங்கப்பட்டது
- கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை , தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மாவட்ட அலுவலகத்திற்கு உடல் உள ரீதியாக துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கான முறைப்பாடுகள் 149 கிடைக்கப் பெற்றது. அதில் 138 பிரச்சினைக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக 165 தடவை வீட்டுத் தரிசனம் மேற்கொள்ளப்பட்டது

## (இ) புனர்வாழ்வு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்

(ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச்செய்யும் புனர்வாழ்வு அதிகாரசபை)

1. போரினால் சேதமடைந்த வீடுகளிற்கான மானியக் கொடுப்பனவு (பொது மக்களிற்கானது).
2. அரச ஊழியர்களிற்கான சொத்தழிவுக் கொடுப்பனவு
3. போரினால் சேதமடைந்த வணக்கஸ்தலங்களிற்கான கொடுப்பனவு
4. போரினால் சேதமடைந்த வீடுகளிற்கான திருத்தவேலைக்கான கடன் கொடுப்பனவு
5. யுத்தத்தின் போது இறந்தவர்களிற்கான நட்ட ஈட்டுக்கொடுப்பனவு.
6. யுத்தத்தின் போது காயமடைந்தவர்களிற்கான நட்ட ஈட்டுக்கொடுப்பனவு.
7. சுயதொழில் கடன் வழங்கல்.
8. புனர்வாழ்வு பெற்றவர்களிற்கான சுயதொழில் கடன் வழங்கல்
9. திருமண சுபீட்ச கொடுப்பனவு.
10. விதவைகளிற்கான சுயதொழில் கடன்திட்டம்.

புனர்வாழ்வு அதிகார சபையினால் புனர்வாழ்வு பெற்றவர்களிற்கான சுயதொழில் கடன்வழங்கல் -2012 அனுப்பப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள்

| பி.செ.பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 992 |
| கண்டாவளை | 332 |
| பூநகரி | 254 |
| பச்சிலைப்பள்ளி | 143 |
| மொத்தம | 1721 |

கடன் வழங்கப்படுவதற்கு நேர்முகத்தேர்வு நடைபெற்று கடன் வழங்கப்பட்ட பயனாளிகள்

| பி.செ.பிரிவு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 251 |
| கண்டாவளை | 76 |
| பூநகரி | 59 |
| பச்சிலைப்பள்ளி | 45 |
| மொத்தம் | 431 |

அலரிமாளிகையில் மேதகு ஜனாதிபதி அவர்களால் (30-07-2012) காசோலை, வங்கிக்கடிதங்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை: 235 பயனாளிகள்

- ❖ யுத்தத்தினால் இறந்த காயப்பட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவு – 31 பயனாளிகள்
- ❖ அரசஊழியருக்கான சொத்திழப்புக்கொடுப்பனவு -15 பயனாளிகள் (1,993,900.00)
- ❖ பொதுமக்களுக்கான சொத்திழப்புக்கொடுப்பனவு - 4 பயனாளிகள் (316,000.00)

## (ஈ) விளையாட்டுத்துறை

முல்லைத்தீவில் நடைபெற்ற மாவட்டங்களுக்கு இடையிலான ஊர்சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட போட்டியாளர்களை அழைத்துச்சென்று பங்குபற்ற வைத்தமை. இதில் எமது மாவட்டத்தில் இருந்து ஆண் போட்டியாளரான வி.லோகனாதன் என்பவர் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய விளையாட்டுப் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதிப்படுத்தி பங்குபற்றினார்.

ஆண்களுக்கான மினி மரதன் போட்டிகளை கிளிநொச்சி மாவட்ட போட்டியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டது. அத்துடன் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு இடையில் கயிறு இழுத்தல் போட்டி நடத்தப்பட்டது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு இணைந்து எல்லே போட்டிகளுடன் தமிழ் சிங்கள புதுவருட விளையாட்டு நிகழ்வும் நடத்தப்பட்டது. தமிழ் சிங்கள புதுவருட நிகழ்வில் 18 வகையான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன் இம் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையிலான குழு நிலை போட்டிகளும் நடாத்தப்பட்டது. அத்துடன் எல்லே போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய அணியினரை மொனராகலையில் நடத்தப்பட்ட தேசிய எல்லே சுற்றுப் போட்டிக்கு அழைத்துச் சென்று பங்குபற்ற வைத்தமை.

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகள் நடத்தப்பட்டது. அத்துடன் யுஎன்டிபி நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் , யுவதிகளுக்கான ஆளனி வலுவூட்டல் மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி இரண்டு நாட்களுக்கு நடாத்தப்பட்டது. அத்துடன் வவுனியாவில் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான வேக நடைப் போட்டிக்கு போட்டியாளர்களை அழைத்துச் சென்றமை. அத்துடன் பிரதேச மெய்வல்லுநர் போட்டியில் திறமையினை வெளிக்காட்டிய வீர வீராங்கனைகளுக்கான மூன்று நாட்களுக்கான பயிற்சி முகாம் கனகபுர ஆர்டிஎஸ் மைதானத்தில் ஒழுங்குபடுத்தி நடாத்தப்பட்டது.

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான வவுனியாவில் நடாத்தப்பட்ட பூப்பந்து, மேசைப்பந்து, கபடி, வேகநடைப் போட்டிகளுக்கு எமது மாவட்ட போட்டியாளர்களை அழைத்துச் சென்று போட்டிகளில் பங்குபற்ற வைக்கப்பட்டது.

இதில் வேகநடைப் போட்டிகளில் பங்குபற்றிய ஆண் போட்டியாளர்களில் இருவர் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட மாகாண கராட்டி , கூடைப்பந்தாட்டம் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளுக்கு எமது மாவட்ட ஆண் வீராங்கனைகள் பங்குபற்ற வைக்கப்பட்டது. அத்துடன் மாவட்ட மெய்வல்லுநர் போட்டி நடத்தப்பட்டது. இப் போட்டிகளில் கராட்டிப் போட்டியில் பங்குபற்றிய எமது மாவட்ட அணி போட்டியாளர்களில் இருவர் இரண்டாம் இடத்தையும் மூவர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ( ஆண்கள்) அணியினர் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா வட மாகாண விளையாட்டு திணைக்களமும் மாவட்ட செயலகமும் இணைந்து மிகவும் கோலாகலமாக நடத்தப்பட்டது. இதில் எமது மாவட்ட போட்டியாளர்களில் உயரம் பாய்தல், ஈட்டி எறிதல்,போட்டிகளில் பங்குபற்றிய இரு பெண் போட்டியாளர்கள் முதலாம் இடத்தையும். மூன்று பெண் போட்டியாளர்கள், இரண்டு ஆண் போட்டியாளர்கள் இரண்டாம் இடத்தையும், ஐந்து பெண் போட்டியாளர்கள், மூன்று ஆண் போட்டியாளர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இப் போட்டிகளில் 1ம், 2ம், 3ம், இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய ஆண், பெண் போட்டியாளர்கள் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 21 வயதுக்குட்பட்ட போட்டியாளர்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகளை நடாத்தியமை. எமது மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலக பிரிவு தெரிவு அணி ஆண் வீரர்களுக்கான 21 வயதுக்குட்பட்ட போட்டியாளர்களுக்கான மாவட்ட உதைபந்தாட்ட போட்டியினை நடாத்தியமை.

தேசிய விளையாட்டுப் போட்டியில் எமது மாவட்ட வீர வீராங்கனைகளை பங்குபற்ற வைத்தமை. அத்துடன யுஎன்டிபி நிறுவனத்தின் அனுசரணையுடன் உதைபந்தாட்ட பயிற்சி முகாம் நடத்தியமை. அத்துடன் 21 வயதுக்குட்பட்ட தேசிய உதைபந்தாட்ட போட்டிக்கு எமது மாவட்ட போட்டியாளர்களை பங்குபற்ற வைத்தமை.

தேசிய விளையாட்டு விழாவில் எமது மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வட மாகாண விளையாட்டு விழாவில் வெற்றியீட்டிய போட்டியாளர்களை பங்குபற்ற வைத்தமை. அத்துடன் யுஎன்டிபி நிறுவன அனுசரணையுடன் வலைப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கு மூன்று நாட்கள் பயிற்சி முகாம் நடாத்தப்பட்டது.

## (உ). பண்பாட்டலுவல்கள் திணைக்களம் செயற்பாட்டறிக்கை

தேசத்திற்கு மகுடம் 2012 ற்கான கண்காட்சியினை முன்னிட்டு நடைபெற்ற கலைநிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்ட கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமை. தேசிய கலை இலக்கிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டமை.

சித்திரை புது வருட தினத்தினை முன்னிட்டு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட புதுவருட தினக் கொண்டாட்டங்களுக்கு கலைநிகழ்வுகள் வழங்கியமை. ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தினரது புதுவருட கொண்டாட்ட தினங்களுக்கான கலை நிகழ்வுகள் வழங்கியமை.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற அரச அலுவலர்களிடையே ஆக்கத்திறன் மற்றும் கலை வெளிப்பாட்டுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு விருதுகள்; வழங்கப்பட்டமை. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் விருது பெற்றுக்கொடு:க்கப்பட்டதுடன் கலாபூஸண விருதும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. கௌரவ ஆளுநர்களின் பதினைந்தாவது மாநாட்டில் கிளிநொச்சி மாவட்ட கலைஞர்களது கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமை.

நவராத்திரி தினத்தினை முன்னிட்டு இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் இம்மாவட்ட கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமை. வடக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் கலைநிகழ்வுகள் வழங்கியமை. கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழாவும் கலைஞர் கௌரவமும் நிகழ்த்தப்பட்டமை. 12 துறைசார்ந்த கலைஞர்களுக்கு கலைக்கிளி விருது வழங்கப்பட்டமை.
கலைஞர் ஒன்று கூடலும் தேவைப்பகுப்பாய்வும் நடத்தப்பட்டமை.
அதிமேதகு ஜனாதிபதி அவர்களது இரண்டாவது பதவிப்பிரமாணத்தினை முன்னிட்டதான மதவழிபாட்டு அனுஸ்ட்டானங்களை மேற்கொண்டமை.

### (ஊ) சமூக சேவை

1. சி.பி.ஆர் செயற்திட்டம் 04 பிரதேச செயலக தொண்டர்களை இணைத்து மேற்கொள்ளப்பட்டது.
2. டி.எஸ்.எஸ்.ஒ, டி.ஆர்.டி.ஒ மாவட்ட மகளீர் அபிவிருத்திப் பேரவை இணைந்து 02 பிரதேச செயலக பிரிவுகளுக்கு சுயதொழில் உதவித்திட்டம் வழங்கப்பட்டது. பரந்தன், உமையாள்புரத்தில் அலுவலகம் அமைக்கப்பட்டது.
3. மாவட்ட சமூகசேவை அலுவலகம் 03 மில்லியனிற்கு முதலாம் கட்டவேலை நிறைவேற்றப்பட்டுள்ளது.
4. மாற்றுவலுவுடையோரிற்கான உபகரணம் சமூகசேவைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.
5. சி.பி.ஆர் தொண்டர்களுக்கான பயிற்சிப் பட்டறை சர்வதேச கண்டிகேப் அமைப்பினால் நடாத்தப்பட்டது.
6. கரிற்தாஸ், கியுடெக் நிறுவனத்தால் வட்டக்கச்சி மாயவனூர் பகுதி மக்களுக்கான சமூக விழிப்புணர்வு நிகழ்வு நடாத்தப்பட்டது.
7. மாற்றுவலுவுடையோரிற்கான ஓவியப் போட்டி வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.
8. முதியோர்,மாற்றுவலுவுள்ளோர் தினம் 04 பிரதேசசெயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டது.

### பொதுசன மாதாந்த கொடுப்பனவு (மாதாந்தம்)

| பிரதேச செயலகம் | ஒதுக்கீடு | பயனாளிகள் |
|---|---|---|
| கரைச்சி | 1,160,000.00 | 3408 |
| பச்சிலைப்பள்ளி | 30,000.00 | 762 |
| பூநகரி | 520,000.00 | 1774 |
| கண்டாவளை | 660,000.00 | 2200 |
| **மொத்தம்** | **2,640,000.00** | **8807** |

### விதவைகள், மாற்றுவலுவுள்ளோர், முதியோர் விபரம்

| இல | பிரதேச செயலகம் | மாற்றுவலுவுள்ளோர் | முதியோர் | விதவைகள் |
|---|---|---|---|---|
| 01 | கரைச்சி | 657 | 8438 | 5189 |
| 02 | பச்சிலைப்பள்ளி | 194 | 523 | 947 |
| 03 | பூநகரி | 328 | 3205 | 2260 |
| 04 | கண்டாவளை | 157 | 2545 | 2957 |
| | **மொத்தம்** | **1336** | **14711** | **11353** |

## நோய்களுக்கான கொடுப்பனவு(மாதாந்தம்)

| பிரதேச செயலகம் | பயனாளிகள் | |
|---|---|---|
| | புற்று நோய் | காச நோய் |
| கரைச்சி | 73 | 18 |
| பச்சிலைப்பள்ளி | 13 | 1 |
| பூநகரி | 11 | 2 |
| கண்டாவளை | 32 | 1 |
| மொத்தம் | 129 | 22 |

## தற்செயல் நிவாரணம் (வீட்டு சேதம்) - 2012

| பிரதேச செயலகம் | பயனாளிகள் |
|---|---|
| கரைச்சி | 34 |
| பச்சிலைப்பள்ளி | 27 |
| பூநகரி | 34 |
| கண்டாவளை | 34 |
| மொத்தம் | 129 |

## மகிந்த சிந்தனை மாதாந்தக் கொடுப்பனவு (3000.00)

| பிரதேச செயலகம் | பயனாளிகள் |
|---|---|
| கரைச்சி | 73 |
| பச்சிலைப்பள்ளி | 13 |
| பூநகரி | 11 |
| கண்டாவளை | 32 |
| மொத்தம் | 129 |

## மூத்த பிரஜைகளுக்கான நலநோக்குச் சேவைகள்

| பிரதேச செயலகம் | அடையாள அட்டை | இல்லங்கள் | சங்கங்கள் |
|---|---|---|---|
| கரைச்சி | 1845 | 01 | 34 |
| பச்சிலைப்பள்ளி | 437 | - | 12 |
| பூநகரி | 56 | - | 07 |
| கண்டாவளை | 98 | - | 15 |
| மொத்தம் | 2436 | 01 | 68 |

## மாற்று வலுவுடையோரிற்கான உதவித்திட்டம்

| இல | பிரதேச செயலகம் | உபகரணங்கள் | சுயதொழில் கொடுப்பனவு |
|---|---|---|---|
| 01 | கரைச்சி | 18 | 42 |
| 02 | பச்சிலைப்பள்ளி | 05 | - |
| 03 | பூநகரி | 02 | 03 |
| 04 | கண்டாவளை | 04 | 30 |
| | மொத்தம் | 29 | 75 |

## யுனிசெவ் நிகழ்ச்சித் திட்டம் (சுயதொழில் கொடுப்பனவு-40,000.00

| பிரதேசசெயலகம் | பயனாளிகள் |
|---|---|
| கரைச்சி | - |
| பச்சிலைப்பள்ளி | - |
| பூநகரி | 51 |
| கண்டாவளை | 07 |
| மொத்தம் | 58 |

## 70 வயதிற்கு மேற்பட்டோருக்கான 1000/= கொடுப்பனவு

| இல | பிரதேச செயலகம் | பயனாளிகள் |
|---|---|---|
| 01 | கரைச்சி | 1044 |
| 02 | பச்சிலைப்கள்ளி | 207 |
| 03 | பூநகரி | 296 |
| 04 | கண்டாவளை | 452 |
| | மொத்தம் | 1999 |

## 5.3. அபிவிருத்தி நடவடிக்கைகள்

### (அ) மாவட்ட திட்டமிடல் செயலகம்

